குரோம்பேட்டையில் நண்பர்கள் நற்பணி மன்றம் நடத்திய போதையில்லா தமிழகம் விழிப்புணர்வு மாரத்தான் நிகழ்ச்சியை மாவட்ட செயலாளர் – குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் துவக்கி வைத்து பரிசுகளை வழங்கினார். உடன் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, மாநகராட்சி மேயர் வசந்தகுமாரி, துணை மேயர் காமராஜ், மண்டல குழுத் தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை, பகுதிச் செயலாளர் த.ஜெயக்குமார், மாவட்ட மருத்துவ அணி துணை அமைப்பாளர் அரவிந்த் மற்றும் பகுதி கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு அரசின் நெறிமுறைகளை முழுமையாகப் பின்பற்றிட வேண்டும்!

வரி வசூல் நடவடிக்கைகளில் பாரபட்சம் கூடாது!

மதுரையில் 11 மாவட்டங்களின் ஆய்வுக் கூட்டத்தில் அமைச்சர் கே.என்.நேரு வலியுறுத்தல்!

மதுரை, பிப். 17 -

வரி வசூல் நடவடிக்கைகளில் தமிழ்நாடு அரசின் வழிகாட்டு நெறிமுறைகளை முழுமையாகப் பின்பற்ற வேண்டும் என்றும், இதில் எந்தவித பாரபட்சமும் கூடாது என்றும் நகராட்சி நிர்வாகம், குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே.என். நேரு அறிவுறுத்தினார்.

மதுரை தமுக்கம் மாநாட்டு மையத்தில் மதுரை, திண்டுக்கல், தேனி, கரூர், ராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி, கன்னியாகுமரி ஆகிய 11 மாவட்டங்களுக்கு உள்பட்ட மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகளில் செயல்படுத்துப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப்பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் சனிக்கிழமை நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் அமைச்சர் கே.என்.நேரு பேசியதாவது:

தமிழகத்தில் 134 நகராட்சிகள், 24 மாநகராட்சிகளில் கடந்த 4 ஆண்டுகளில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம், சீர்மிகு நகரத் திட்டம், மூலதன மானிய நிதி, அம்ருத் 2.0, தூய்மை இந்தியா திட்டம் 2.0, நமக்கு நாமே திட்டம் (நகர்ப்புறம்), நகர்ப்புற சாலை மேம்பாட்டு திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள், ஆசிய வளர்ச்சி வங்கி, உலக வங்கி, ஜெர்மன் வங்கி நிதியுதவி மூலம் மொத்தம் ரூ.29,084 கோடியில் பேருந்து நிலையங்கள், சந்தைகள், அறிவுசார் மையங்கள், சாலைகள், பூங்காக்கள், நீர்நிலை மேம்பாடு, குடிநீர் வசதி, புதை சாக்கடை வசதி போன்ற பல உள்கட்டமைப்பு பணிகள் அனுமதிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

மாநிலம் முழுவதும் கடந்தாண்டு 5.50 லட்சம் எல்.இ.டி. தெரு மின் விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், விடுப்பட்ட பகுதிகளில் அமைப்பதற்கு கூடுதலாக 1.50 லட்சம் எல்.இ.டி.விளக்குகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 3 ஆண்டுகளில் திண்டுக்கல் மாவட்ட குடிநீர்த் திட்டத்துக்கு ரூ.1446.12 கோடி, கரூர் மாவட்டத்துக்கு ரூ.522.04 கோடி, மதுரை மாவட்டத்துக்கு ரூ.2008.70 கோடி, விருதுநகர் மாவட்டத்துக்கு ரூ.2027.40 கோடி, தேனி மாவட்டத்துக்கு ரூ.780.89 கோடி, சிவகங்கை மாவட்டத்துக்கு ரூ.1952.73 கோடி, ராமநாதபுரம் மாவட்டத்துக்கு ரூ.3,289.28 கோடி, திருநெல்வேலி மாவட்டத்துக்கு ரூ.1450.22 கோடி, தென்காசி மாவட்டத்துக்கு ரூ.226.59 கோடி, தூத்துக்குடி மாவட்டத்துக்கு ரூ.572.54 கோடி, கன்னியாகுமரி மாவட்டத்துக்கு ரூ.508.22 கோடி, புதை சாக்கடை திட்டத்துக்கு விருதுநகர் மாவட்டத்துக்கு ரூ.596.84 கோடி, தேனி மாவட்டத்துக்கு ரூ.41.72 கோடி, சிவகங்கை மாவட்டத்துக்கு ரூ.140.13 கோடி, ராமநாதபுரம் மாவட்டத்துக்கு ரூ.52.60 கோடி, தூத்துக்குடி மாவட்டத்துக்கு ரூ.368.52 கோடி, கன்னியாகுமரி மாவட்டத்துக்கு ரூ.129.95 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

நகராட்சி நிர்வாகத் துறையின் மூலம் வளர்ச்சித் திட்டப் பணிகளை மேற்கொள்வதற்காக ஆண்டுதோறும் ரூ. 24 ஆயிரம் கோடி நிதியை தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் ஒதுக்கீடு செய்து வருகிறார்.

எனவே, திட்டப் பணிகளை ஆணையர்கள், செயல் அலுவலர்கள், அனைத்து அலுவலர்களும் ஒருங்கிணைந்து செயல்பட்டு, விரைவில் பொது மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வர வேண்டும். வரி வசூல் தொடர்பாக சில குற்றச்சாட்டுகள் எழுகின்றன.

வரி வசூல் தொடர்பான நடவடிக்கைகளில் தமிழக அரசின் வழிகாட்டு நெறிமுறைகளை முழுமையாகப் பின்பற்ற வேண்டும். இதில், எந்தவித பாரபட்சமும் கூடாது.

இவ்வாறு அமைச்சர் கே.என்.நேரு வலியுறுத்தினார்.

கூட்டத்தில் அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, கீதா ஜீவன், அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், அர. சக்கரபாணி, வி. செந்தில்பாலாஜி, பி. மூர்த்தி, மக்களவை உறுப்பினர்கள் கனிமொழி (தூத்துக்குடி), சு.வெங்கடேசன் (மதுரை), தங்கதமிழ்ச்செல்வன் (தேனி), ராணி ஸ்ரீகுமார் (தென்காசி), ராபர்ட் புரூஸ் (திருநெல்வேலி), முதன்மைச் செயலர் கார்த்திகேயன், நகராட்சி நிர்வாக இயக்குநர் சிவராசு, மேயர் வ. இந்திராணி, மாவட்ட ஆட்சியர் மா.சௌ. சங்கீதா, மாநகராட்சி ஆணையர் சித்ரா விஜயன், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் கிரண்குராலா, 11 மாவட்டங்களைச் சேர்ந்த சட்டப் பேரவை உறுப்பினர்கள், மேயர்கள், ஆணையர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

ரூ. 1.38 கோடி செலவில் புதுப்பிக்கப்பட்ட

வியாசர்பாடி, இரவீஸ்வரர் திருக்கோயில் திருக்குளம்!

அமைச்சர் பி.கே.சேகர்பாபு பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்!

சென்னை, பிப். 17 -

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (16.02.2025) சென்னை, வியாசர்பாடி, இரவீஸ்வரர் திருக்கோயிலில் ரூ.1.38 கோடி செலவில் புதுப்பிக்கப்பட்ட திருக்குளத்தை பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். அதனைத் தொடர்ந்து, ஐ.சி.எப். பகுதியில் அமைந்துள்ள கமல விநாயகர் திருக்கோயிலுக்கு ரூ.90 இலட்சம் மதிப்பீட்டில் திருப்பணிகள் மேற்கொண்டு குடமுழுக்கு நடத்திடும் வகையில் நடைபெற்ற பாலாலய நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

பின்னர் அமைச்சர் பி.கே. சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்றபின், ஆகம விதிகளின்படி குடமுழுக்கு நடைபெற்று 12 ஆண்டுகள் முடிவுற்றபின், திருப்பணிகள் மேற்கொள்ளப்படாத திருக்கோயில்களை கண்டறிந்து குடமுழுக்கு நடத்துதல், திருத்தேர் மற்றும் திருக்குளங்களை சீரமைத்தல், பக்தர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்கிடும் வகையில் விருந்து மண்டபங்கள், முடிக் காணிக்கை மண்டபங்கள், புதிய திருமண மண்டபங்கள், பக்தர் தங்கும் விடுதிகள் என பல்வேறு வசதிகளை செய்து தருவதோடு, திருக்கோயில் நிலங்களை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டெடுத்தல் மற்றும் பாதுகாத்தல் போன்ற பல்வேறு பணிகளை இந்து சமய அறநிலையத்துறை துரிதமாக மேற்கொண்டு வருகிறது.

அந்த வகையில் இன்றைக்கு வியாசர்பாடி, இரவீஸ்வரர் திருக்கோயிலுக்கு சொந்தமான குளம் ஒரு கோடியே 38 லட்ச ரூபாய் செலவில் புனரமைக்கப்பட்டு பக்தரின் நேர்த்திக்கடன் மற்றும் பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்கப்பட்டது. அந்த திருக்கோயிலானது 800 ஆண்டுகள் பழமை வாய்ந்த திருக்கோயில் என்பதால் சாலை மட்டம் உயர்ந்து திருக்கோயில் ஆறடிக்கு கீழே சென்று விட்ட நிலையில், சென்னையில் கற்கோடி அம்மன் திருக்கோயில், சுப்பிரமணியசாமி திருக்கோயில், திரௌபதி அம்மன் திருக்கோயில் , சைதாப்பேட்டை வீர ஆஞ்சநேயர் திருக்கோயில் போன்ற 20 திருக்கோயில்களை இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி தரை மட்டத்திலிருந்து உயர்த்துகின்ற (லிப்டிங்) பணிகள் நடைபெற்று வருகின்றன. இரவீஸ்வரர் திருக்கோயில் ரூ. 1.40 கோடி மதிப்பீட்டில் லிப்டிங் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திருக்கோயிலுக்கு வரும் மே அல்லது ஜூன் மாதத்திற்குள் குடமுழுக்கு நடத்தப்பட உள்ளது. டைபெறும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறோம்.

பண்டைய காலத்தில் நீர் மேலாண்மைக்கு முக்கியத்துவம் தந்த ஒரு மன்னர் ஆட்சி உண்டென்றால் அது கரிகால சோழன் ஆட்சி என்பார்கள், அந்த வகையிலே மன்னர் ஆட்சிக்குப் பிறகு மக்களாட்சி ஏற்பட்ட பிறகு, மன்னர்கள் காலத்தில் நடைபெற்ற திருப்பணிகளுக்கு நிகராக இன்றைக்கும் திருப்பணிகள் நடைபெறுகிறது என்றால் அது தமிழக முதல்வர் ஆட்சியில் தான் என்றால் அது மிகையாகாது. அந்த வகையில் இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு நான்கு திருக்கோயில்கள் சுமார் நான்கு கோடி ரூபாய் செலவில் புதிதாக திருக்குளங்கள் ஏற்படுத்தப்பட்டிருப்பதோடு 220 திருக்கோயில்களின் திருக்குளங்கள் சுமார் 120 கோடி 33 லட்சம் செலவில் புனரமைக்கப்பட்டு வருகின்றது. இந்து சமய அறநிலைத் துறையில் இந்த அளவிற்கு அதிக எண்ணிக்கையில் எந்த ஆட்சியிலும் இதற்கு முன்பு எவ்வளவு பணிகள் எடுத்துக் கொள்ளப்படவில்லை என்பதை உறுதியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

பழமையான கோயில்கள் புனரமைப்பு!

ஆயிரம் ஆண்டுகள் பழமையான திருக்கோயில்களை புனரமைத்து பாதுகாத்திட தமிழக முதல்வர் அவர்கள் 300 கோடி ரூபாய் அரசு நிதி வழங்கி இருக்கின்றார். அதோடு உபயதாரர் நிதி மற்றும் திருக்கோயில் நிதி என்று 127 கோடி ரூபாய் வழங்கப்பட்டு ஒட்டுமொத்தமாக 427 கோடி ரூபாய் செலவில் 274 தொன்மையான திருக்கோயில்களில் பணிகள் நடைபெற்று வருகிறது. அதில் 47 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளது. இந்த ஆட்சி ஏற்பட்ட நாள் முதல் இதுவரை 2, 587 திருக்கோயில் களுக்கு குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளது. இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு தான் ஒரே நாளில் 98 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளது. வருகின்ற 16 ஆம் தேதியன்று 21 கோயில்களுக்கு குடமுழுக்கு கொடுக்க நடைபெற இருக்கின்றது. இந்து சமய அறநிலைத்துறை வரலாற்றில் இவ்வளவு அதிக எண்ணிக்கையில் குடமுழுக்கு நடைபெற்றது இந்த ஆட்சியில் தான் என்பதை பெருமிதத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த ஆட்சியின் 10 ஆண்டு காலத்தில் மூன்றாயிரம் கோடி ரூபாய் அளவிற்கு கூட திருக்கோயில் நிலங்கள் மீட்கப்படவில்லை. இந்த மூன்றரை ஆண்டுகால ஆட்சியில் 7,171 கோடி ரூபாய் அளவிற்கு கோயில் நிலங்கள் மீட்கப்பட்டுள்ளன. மாநில வல்லுநர் குழுவால் இதுவரையில் 11,261 திருக்கோயில்களின் திருப்பணிக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது. அந்த வகையில் இந்து சமய அறநிலையத்துறையில் 5646 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 24,284 பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதில் உபயதாரர்கள் மட்டும் ரூ. 1298 கோடி மதிப்பிலான 10,081 பணிகளை செய்து தருகின்றனர். அதேபோல ஐசிஎப் பகுதியில் அமைந்துள்ள கமல விநாயகர் திருக்கோயிலுக்கு ரூபாய் 90 லட்சம் செலவில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு இன்று பாலாலயம் செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் இருக்கின்ற அரசியல் கட்சிகளை எடுத்துக் கொண்டால் ஒன்றுக்கும் உதவாத, தினந்தோறும் பொய், புரட்டுகளையே அரசியல் ஆக்கிக் கொண்டிருக்கின்ற ஒரு தலைவர் இருக்கின்றார் என்றால் அவர் அண்ணாமலை தான். கடந்த காலங்களில் பத்தாயிரம் நபர்கள் தைப்பூசத்திற்கு கூடுகின்ற நிலையிலிருந்து இன்றைக்கு ஒரு நாளைக்கு இரண்டு லட்சம் பக்தர்கள் திரண்டு வருகின்றார்கள். அவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளையும், இலகுவான இறை தரிசனத்திற்கும் ஏற்பாடு செய்து அனைவரும் மன திருப்தியாக இறை தரிசனம் செய்தார்கள் என்றால் அது இந்த ஆட்சியில் தான். அண்ணாமலை கூறியது போல் கடந்த காலம் வேண்டும் என்றால் அப்படி இருந்திருக்கலாம்.

பெருந்திட்ட வரைவுப் பணிகள்!

தற்போது பழனி திருக்கோயிலை பொறுத்த அளவில் இன்றைக்கு 96 கோடி ரூபாய் செலவில் முதல் பெருந்திட்ட வரைவு பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. இரண்டாம் பெருந்திட்ட வரைவு பணிகளுக்கு 50 ஏக்கர் நிலம் கையகப்படுத்துவதற்கு அரசின் சார்பில் 58 கோடி ரூபாயை ஒதுக்கி இருக்கின்றது. இரண்டாவது மாஸ்டர் பிளான் 136 கோடி ரூபாய் செலவில் தயார் செய்யப்பட்டு வருகின்றன. திருச்செந்தூரை எடுத்துக் கொண்டால் 450 கோடி ரூபாய் செலவில் இன்றைக்கு திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதில் ஒரு பகுதியாக கட்டணச் சீட்டு வழங்குகின்ற மண்டபம் அட்மினிஸ்ட்ரேஷன் ப்ளாக் போன்ற 20 கோடி ரூபாய் செலவில் முடிக்கப்பட்ட பணிகளை நாளைய தினம் தமிழக முதல்வர் அவர்கள் மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கிறார். இப்படி நாளொரு மேனி பொழுதொரு வண்ணமாக திருக்கோயில்கள் வளர்ச்சி எப்படி அடைந்து கொண்டிருக்கின்றதோ, அதுபோல் பக்தர்களுடைய எண்ணிக்கையும் கூடிக் கொண்டே இருக்கின்றது. அதற்கேற்றார்போல் பக்தர்களுடைய தேவையை முழுமையாக நிறைவேற்றுகின்றது இந்த அரசு. ஆன்மீகத்தில் தலையிட்டு அரசியலாக நினைக்கின்ற அண்ணாமலையின் கபட நாடகம் தமிழகத்தில் எடுபடாது, தமிழ்நாடு முதல்வர் அவர்கள் உள்ள வரை அவருடைய கனவு பகல் கனவாக தான் முடியும்.

வட மாநிலங்களில் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற சம்பவங்கள் எல்லாம் அண்ணாமலைக்கு கண்ணுக்குத் தெரியாது, காதுக்கு கேட்காது. தமிழகத்தில் எங்காவது ஒரு சம்பவம் நடந்திருந்தாலும் அதை எவ்வளவு ஊதி பெரிதாக்கி இருப்பார். தமிழகத்தை பொறுத்தளவில் லட்சக்கணக்கான மக்கள் கூடுகின்ற நிகழ்வுகளாக, திருவிழாக்களாக இருந்தால் முதல்வர் அவர்கள் என்னையும், அந்தந்த மாவட்ட அமைச்சர்களையும் முன்னேற் பாடு கூட்டங்களை முன்கூட்டியே நடத்தி மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்திட வேண்டுமென உத்தரவிட்டுள்ளார். அதனடிப்படையில் திருவண்ணாமலையில் கடந்த கார்த்திகை தீபத்திருவிழா மற்றும் பௌர்ணமி தினத்தன்று 25 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் கூடிய போதும் எவ்வித ஒரு சிறு அசம்பாவிதமும் ஏற்படாத வகையில் சிறப்பான முறையில் நடத்திக் காட்டினோம். அதேபோல திருவண்ணாமலை மலையில் ஏற்பட்ட நிலச்சரிவால் மலை உச்சியில் தீபம் ஏற்றப்படுமா என்று பக்தர்கள் ஏக்கத்தோடு இருந்த போது, தீபம் எரியும் என்ற உறுதியை தமிழக முதல்வர் அவர்கள் அளித்து, பக்தர்களுடைய மனதில் கார்த்திகை தீபத் திருவிழாவை ஒளி மயமாக கொண்டாடிய அரசு இந்த அரசு. இவை எல்லாம் அண்ணாமலையின் எண்ணத் திற்கு செல்லாது. ஏனென்றால் அவருடைய எண்ணங்கள் முழுவதுமே கலங்கப்பட்டு இருக்கின்றது. கள்ள எண்ணம் என்பதால் இது நிச்சயம் அவருடைய எண்ணத்திற்கு செல்லாது.

பாதுகாக்கப்பட்ட குடிநீர்!

வெயிலின் தாக்கத்திலிருந்து பக்தர்களை காத்திடும் வகையில் அதிகமாக பக்தர்கள் கூடுகின்ற அனைத்து திருக்கோயில்களிலும் தேங்காய் நார் விரிப்புகள் (காயர் மேட்) பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அதேபோல் திருக்கோயில்களில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் மற்றும் கட்டணமில்லாமல் மோர் வழங்கப்பட்டு வருகிறது. கோடைகாலம் தொடங்க உள்ள தால் நாளை மறுதினம் நடைபெறவுள்ள மாநில அளவிலான சீராய்வுக் கூட்டத்தில் பக்தர்களுக்கு செய்து தரப்படவேண்டிய வசதிகள் குறித்து கலந்தாலோசித்து உரிய அறிவுரைகள் வழங்கப்படும்.

ஒரு நேர்மையான, சட்டத்தின் ஆட்சி தமிழகத்தில் நடந்து கொண்டிருக்கின்றது. எப்படியாவது மக்களிடையே பிளவுகளை ஏற்படுத்தி பிளவு அரசியலை நடத்த வேண்டும் என்று அண்ணாமலை முயற்சிக்கிறார். இந்த மண்ணில் நடைபெறுவது திராவிட மாடல் ஆட்சி. இங்கு அனைத்து மதங்களை சேர்ந்த மக்களும் தங்களது பண்டிகைகளின்போது செய்யப்படும் பிரியாணி, கேக். பொங்கல் போன்றவற்றை ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொண்டு, சகோதரத்துவத்தோடு மாமன், மச்சான்களாக வாழ்ந்து கொண்டிருக்கின்ற இந்த மண்ணில் பிரிவினைக்கு இடமே இல்லை, ஆகவே சாதி, மதம், இனம் மற்றும் மொழியால் மக்களை பிளவுபடுத்துகின்ற இயக்கங்களுக்கு 2026 சட்டமன்ற தேர்தலில் பதிலடி தருவதற்கு மக்கள் காத்துக் கொண்டிருக்கின்றனர்.

முருகனின் அறுபடை வீடுகளுக்கும், அறுபடையில் இல்லாத முருகன் திருக்கோயில்களுக்கும் இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகுதான் 817 கோடி ரூபாய் செலவில் திருப்பணிகளை மேற்கொண்டு இருக்கின்றோம். 101 முருகன் திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளதோடு, 26 நாடுகளைச் சேர்ந்த முருக பக்தர்கள் போற்றும் வகையில் பழனியில் அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டை நடத்திக் காட்டிய பெருமை திராவிட மாடல் ஆட்சிக்கு உண்டு. அண்ணாமலை போன்றவர்கள் வேலை கையிலே பிடித்து நடந்து வந்தாலும், ஓடி வந்தாலும், உருண்டு வந்தாலும், போலியாக காவடியை சுமந்து சென்றாலும் முருக பக்தர்கள் நிச்சயம் முருகனுக்கு பெருமை சேர்க்கின்ற ஆட்சியின் நாயகன் தமிழக முதலமைச்சர் அவர்களின் கரத்தை தான் பலப்படுத்துவார்கள்.

திருத்தணியில் இப்போது ஏற்படுத்தப்பட்டுள்ள அறங்காவலர் குழு முழு வேகத்தோடு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. திருக்கோயில் இராஜகோபுரத்துடன் படிக்கட்டுகளை இணைக்கு பணிகளுக்கு ஐஐடியின் ஒப்புதல் பெறப்பட்டுஇ எல் அண்ட் டி நிறுவனம் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன. இந்த ஆண்டு இறுதிக்குள் 365 படிகளை பக்தர்கள் ஏறி இராஜகோபுரத்தின் வழியாக சென்று முருகனை தரிசிக்கின்ற ஒரு நல்ல சூழ்நிலையை திராவிடம் மாடல் ஆட்சி ஏற்படுத்தித் தரும்.

இவ்வாறு அமைச்சர் பி.கே. சேகர்பாபு தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில் மேயர் பிரியா ராஜன், பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.டி.சேகர், இந்து சமய அறநிலையத்துறை கூடுதல் ஆணையர் திருமதி ந.திருமகள், சென்னை மண்டல இணை ஆணையர் திருமதி ஜ.முல்லை, மாநகராட்சி மண்டலக் குழுத் தலைவர் நேதாஜி உ.கணேசன், உதவி ஆணையர் கே.சிவக்குமார், மாநகராட்சி உறுப்பினர் சி.ஆனந்தி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (16.02.2025) சென்னை, வியாசர்பாடி இரவீஸ்வரர் திருக்கோயிலில் புதுப்பிக்கப்பட்ட திருக்குளத்தை பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். உடன் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி பிரியா ராஜன், பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.டி.சேகர், இந்து சமய அறநிலையத்துறை கூடுதல் ஆணையர் திருமதி ந. திருமகள். சென்னை மண்டல இணை ஆணையர் திருமதி ஜ.முல்லை. மாநகராட்சி மண்டலக் குழுத் தலைவர் நேதாஜி உ. கணேசன். உதவி ஆணையர் கே. சிவக்குமார், மாநகராட்சி உறுப்பினர் திருமதி சி. ஆனந்தி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

மிசா பிகே. ராஜகோபால்

பிப்ரவரி 17 (2002)

திருவள்ளூர் மாவட்டம், போரூர் நகரச் செயலாளராக தொடர்ந்து முப்பது வருடங்களாக பணியாற்றியவர்.

சைதாப்பேட்டை கூட்டுறவு நிலவள வங்கியின் இயக்குனராகவும் பணியாற்றியவர்.

மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு ஒரு வருடம் சிறையில் இருந்துள்ளார்.

மேலும், கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.